# <u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி</u>

**அசல் வழக்கு எண் 210/2015**

பெயர்: மகேஸ்வரி நாள்: 26.09.2023

பி.வா.சா.1 – வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி

பி.வா.சா.1 – மகேஸ்வரி - சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>குறுக்கு விசாரணை தொடக்க நேரம் 11.27</u>

சர்வே எண் 384/1 ஆனது எனது தாயாரின் பூர்வீக சொத்தாகும். மேற்படி சர்வே எண்ணுக்கு கிழக்கு திசையில் தென்வடலாக செல்லும் கான்கிரீட் சாலை உள்ளது. அதேபோல் தெற்கு திசையில் கிழமேலாக செல்லும் தார் சாலை உள்ளது. சர்வே எண் 384/3 என்பது அரசுக்கு சொந்தமான காலி புறம்போக்கு நிலமாக உள்ளது என்றால், சரியல்ல. சர்வே எண் 384/3 க்கு தெற்கே பொன்னம்பாளையம்-பூமணியூர் செல்லும் தார் சாலை உள்ளது. இந்த தார் சாலை வழியாக சென்றால்தான் எனது தாயாரின் பூர்வீக சொத்தை அடைய முடியும் என்றால், சரியல்ல. நான் முதன்மை சாட்சியத்தில் எனது தாயார் நிலத்திற்கு கோவில் வழியாக செல்வதாக பொய் சாட்சியம் கூறியுள்ளேன் என்று சொன்னால், சரியல்ல. பொதுவாக வண்டிப்பாதை இருந்தால் அதுசம்பந்தமாக புல வரைபடத்தில் விலக்கி குறியீடு செய்யப்பட்டிருக்கும் என்று சொன்னால், சரிதான்.

2) பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் சர்வே எண் 384/5 கோவில் நிலம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். தடம் பூஸ்திதியில் இருந்திருந்தால் அது பி.வா.சா.ஆ.1 ஆவணத்திலேயே குறிப்பிடப்பட்டிருக்கும் என்றால், அவ்வாறு எந்த பாதையும் இல்லாததால்தான் பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் பாதை குறித் குறிப்பு ஏதேனும் இல்லையென்று சொன்னாலும், சரியல்ல. சர்வே எண் 381/1 என்பது எனது தாயாருக்கு சொந்தமான பூர்வீக சொத்து என்றால், சரிதான். இதற்கான வருவாய்

ஆவணங்கள் அனைத்தும் எனது தாயார் பெயரில்தான் உள்ளது. சர்வே எண் 381/1 க்கு மேற்கே அரசு துவக்கப்பள்ளி உள்ளது என்றால், சரிதான். சர்வே எண் 381/1 ன் கிழக்கு பகுதி அண்ணாமலையார் திருக்கோவிலுக்கு பாத்தியப்பட்ட நிலம் என்று சொன்னால், சரியல்ல.

வாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க பி.வா.சா.3 ன் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.

<u>குறுக்கு விசாரணை முடிந்த நேரம் 11.40</u>

ஒப்பம் /மகேஸ்வரி

ஒப்பம்/திரு.ஆர்.ராதாகிருஷ்ணன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.